# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு
## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 73

**2 மதிப்பெண் வினாக்கள்**

4 x 2 = 8

1) மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

**பதில் :** ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்டக் காலத்திற்குள் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே, மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

2) கல்வி, சுகாதராம் இவை மிக சிறந்த முதலீடு, நியாயப்படுத்து.

**பதில் :** மனித வள மேம்பாட்டு என்பது மனிதனின் உடல்திறன் மற்றும் சுகாதாராத் திறன்களை கல்வியின் மூலம் மேம்படுத்துவதாகும். எனவே மனித வளத்தில் கல்வி மற்றும் உடல்நலத்தில் செய்யப்படும் முதலீடு எதிர்காலத்தில் உயர்ந்த வருமானத்தை அளிக்கலாம். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் நல்ல கல்வி, சிறந்த சுகாதாரம் எதிர்காலத்தில் அவர்களுக்கு அதிக வருமானம் பெறக்கூடிய முதலீடு ஆகும்.

3) வனம், வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டங்கள் யாவை?

**பதில் :** 1. பல்லுயிர்மை பாதுகாப்புச் சட்டம் - 2002
2. வன பாதுகாப்பு சட்டம் - 1980
3. வன விலங்குகள் பாதுகாப்பு சட்டம் - 1972

4) தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சமூக நலத்திட்டங்கள் சிலவற்றைக் கூறுக.

**பதில் :** தமிழ்நாட்டில் பல சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவை மத்திய உணவு வழங்கும் திட்டம், சுகாதார மையங்கள், சாலை வசதிகள், பொதுப்போக்குவரத்து, குடிநீர் வசதி, மின் இணைப்பு வழங்குதல் போன்றவை ஆகும்.

**3 மதிப்பெண் வினாக்கள்** 10 x 3 = 30

5) மேம்பாடு என்பதற்கு நீங்கள் என்ன பொருள் கொள்கிறீர்கள்?

**பதில் :** 1. மேம்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட துறையின் அல்லது ஒரு குறிப்பிட்ட நபரின் வளர்ச்சியைக் குறிக்கிறது.
2. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பதே அதன் பொருளாதார மேம்பாடு என்று அறியப்படுகிறது.
3. உயர்ந்த வருவாய், தரமான கல்வி, நல்ல உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து, குறைந்த வறுமை,நிலைத்த சமவாய்ப்பு போன்றவை வாழ்க்கைத் தரத்தில் மேம்பாட்டைக் குறிக்கின்றன.

6) பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?

**பதில் :** 1. நிகர நாட்டு உற்பத்தி (NNP)
2. தனிநபர் வருமானம் (PCI)
3. வாங்கும் திறன் சமநிலை (PPP)
4. மனித வள மேம்பாட்டுக் குறியீடு (HDI)
5. ஆகியன பொருளாதார மேம்பாட்டின் முதன்மையான குறியீடுகளாகும்.

7) ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பிற நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு நிகர நாட்டு உற்பத்தி பயனுள்ள அளவீடாகக் கருதப்படாதது ஏன்

**பதில் :** 1. நாடுகளின் வளர்ச்சியினை ஒப்பிட மொத்த வருவாயைக் கணக்கிடுவது ஒரு பயனுள்ள நடவடிக்கையாக இருக்க முடியாது.
2. ஏனெனில், ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு வித மக்கள் தொகை காணப்படுகிறது. நாட்டின் மொத்த வருவாயை ஒப்பிட்டு சராசரி தனிநபர் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளதென்று சொல்ல முடியாது.
3. நாட்டின் தலா வருமானத்தை கணக்கிட நாட்டின் மொத்த வருமானத்தை நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க வேண்டும்.
4. மேலும் அனைத்து நாடுகளின் தனிநபர் வருமானத்தின் கணக்கீடுகள் சர்வதேச அளவில் ஒப்பிடுவதற்காக அமெரிக்க டாலரில் மட்டுமே கணக்கிடப்படுகிறது.

8) எந்த ஒரு நாட்டினுடைய முதன்மை வளமாக மனித வளம் கருதப்பதப்படுவது ஏன்?

**பதில் :** 1. எந்த ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மனித வளங்கள் அவசியமாகும்.
2. உற்பத்தித் துறையில் பயன்படுத்தக் கூடிய மனித வளங்களை கொண்டிருக்கும் மக்களையே மனித வளம் என்ற சொல் குறிக்கிறது.
3. மனித வள மேம்பாடு என்பது மனிதனின் உடல்திறன் மற்றும் சுகாதாரத் திறன் களை கல்வியின் மூலம் மேம்படுத்துவது ஆகும்.
4. எனவே மனித வளத்தில் கல்வி மற்றும் உடல் நலத்தில் செய்யப்படும் முதலீடு எதிர்காலத்தில் உயர்ந்த வருமானத்தை பெறக்கூடிய முதலீடு ஆகும்.

9) பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.
1. PPP
2. HDI

**பதில் :** 1. PPP - Purchasing Power parity வாங்கும் திறன் சமநிலை
2. HDI - Human Development Index மனித வள மேம்பாட்டுக் குறியீடு.

10) பின்வருவனவற்றை விரிவாக்கம் செய்க.
1. NNP
2. PCI

**பதில் :** 1. NNP - Net National Product நிகர நாட்டு உற்பத்தி.
2. PCI- Per Capita Income தனி நபர் வருமானம்.

11) சூரிய சக்தி என்றால் என்ன?

**பதில் :** 1. சூரிய சக்தி என்பது சூரிய ஒளி மூலம் மின்சக்தியை நேரடியாக சூரிய ஒளியின் மின்னழுத்த செல்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்துவதாகும்.
2. சூரிய ஒளி தகடுகள் சூரிய ஒளியினை மின் சக்தியாக மாற்ற சூரிய ஒளியை வேதி வினைக்கு உட்படுத்தி ஆற்றலாக மாற்றுகிறது.
3. சூரிய மின் தகடுகள் மூலம், வீடு மற்றும் அலுவலகத்திற்கு தேவையான மின்சாரம் தயாரிக்க முடியும்.

12) உனது பகுதியில் நீங்கள் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை பற்றி விவரி.

**பதில் :** எனது பகுதியில் கீழ்கண்ட சுற்றுச்சூழல் பிரச்சனைகள் உள்ளன:
**1. காற்று மாசு:** எனது பகுதியில் வாகன பெருக்கத்தின் காரணமாக காற்று மாசடைந்துள்ளது.
**2. தண்ணீர் மாசுபாடு:** முன்னர் எல்லாம் எங்கள் வீட்டு குழாய்களில் தூய்மையான தண்ணீர் வரும். தற்போது நீர் மாசுபாட்டின் காரணமாக கலங்கிய நீரே வருகிறது.
**3. நில மாசுபாடு:** மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாக எங்கள் பகுதியில் நிலமானது மாசுபட்டு காணப்படுகிறது.

13) வாங்கும் திறன் சமநிலை என்றால் என்ன?

**பதில் :** 1. வாங்கும் திறன் சமநிலை என்பது, ஒரு நாட்டினுடைய நாணயங்களின் எண்ணிக்கைக்கு இணையாக, ஒரு சந்தையில் அமெரிக்க டாலரில் வாங்குவதற்கேற்றவாறு. உள்நாட்டுச் சந்தையில் அதே அளவிலான பொருட்களையும் வாங்குவதற்குத் தேவைப்படுகிறது.
2. வாங்கும் திறன் சமன்பாட்டின் நுட்பம் என்பது இருநாடுகளின் இரண்டு நாணயங் களுக்கிடையேயான பரிமாற்றம் அந்தந்த நாடுகளிலுள்ள இரண்டு நாணயங்களின் துல்லியமான வாங்கும் திறனை வெளிப்படுத்தத் தேவை என்பதை மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

14) நிலையான மேம்பாடு என்றால் என்ன?

**பதில் :** 1. நிலையான பொருளாதார மேம்பாடு என்பது, தற்போதுள்ள சுற்றுச் சூழலைச் சேதப்படுத்தாமல் மேம்பாடு அடைவது ஆகும்.
2. எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்காக எவ்வித சமரசமும் செய்து கொள்ளக் கூடாது.
3. சுற்றுச்சூழல் சீரழிவின் விளைவுகள் தேசிய, மாநில எல்லைகளுக்கு உட்பட்டு உள்ளது.
4. அறிவியல் அறிஞர்கள். பொருளாதார வல்லுநர்கள், தத்துவவாதிகள் மற்றும் சமூக வியலாளர்கள் போன்றோர் ஒன்று சேர்ந்து உழைப்பதன் விளைவாக நிலையான மேம்பாடு அடைய முடியும்.

## 5 மதிப்பெண் வினாக்கள்

7 x 5 = 35

15) நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி.

**பதில் : மரபு சாரா வளங்களைப் பயன்படுத்துதல்:**

1. இந்தியா மின்சார தேவைகளைப் பூர்த்தி செய்ய அனல் மின்சாரம் மற்றும் புனல் மின்சார நிலையங்களைச் சார்ந்திருக்கிறது.

2. இந்த இரண்டு உற்பத்தி நிலையங்களும் பாதகமான சுற்றுச்சூழல் தாக்கத்தைக் கொண்டுள்ளன.

3. அனல் மின் நிலையங்கள் கார்பன் - டை ஆக்சைடை அதிக அளவு வெளியேற்றி சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன.

**சூரிய சக்தி:**

1. சூரிய சக்தி என்பது சூரிய ஒளி மூலம் மின்சக்தியை நேரடியாக சூரிய ஒளியின் மின்னழுத்த செல்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்துவதாகும்.

2. சூரிய ஒளி தகடுகள் சூரிய ஒளியினை மின் சக்தியாக மாற்ற சூரிய ஒளியை வேதி வினைக்கு உட்படுத்தி ஆற்றலாக மாற்றுகிறது.

3. சூரிய மின்தகடு அமைப்பின் மூலம், வீடு மற்றும் அலுவலகத்திற்கு தேவையான மின்சாரம் தயாரிக்க முடியும்.

4. இவை மின் செலவைக் குறைப்பதற்காக நிறுவப்படுகின்றன.

5. தமிழ்நாடு அதிக அளவில் சூரிய மின்தகடு அமைப்பு கொண்ட மாநிலமாக உள்ளது.

6. இந்தியாவின் சூரிய சக்தி மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது.

16) இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்

**பதில் :** 1. இந்தியா தன் சுற்றுச்சூழல் கொள்கைகளைக் கடந்த 30 ஆண்டுகளாக உருவாக்கிக் கொண்டு வந்துள்ளது.

2. காற்று, நீர் மாசுபாடு.கழிவு மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற சிக்கல்களைத் தீர்க்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

3. இந்தியா குறைந்த வளங்களுடன் பொருளாதார மேம்பாட்டை அடைய பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

4. நிலையற்ற காலநிலை குறைந்த வளங்கள் போன்றவற்றை எதிர்கொண்டு அணுகு முறைகளில் மாற்றம் கொண்டு. இந்தியா தனது பாதையில் சவால்களைச் சந்தித்து நிலையான மேம்பாட்டை அடைந்துள்ளது.

5. இந்தியாவின் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகள், நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் கூடுதல் அதிகாரங்கள் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி. நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது.

17) புதுப்பிக்க தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க தகாத வளங்கள் - வேறுபடுத்துக

**பதில் :**

| **புதுப்பிக்க தக்க வளங்கள்** | **புதுப்பிக்க தகாத வளங்கள்** |
|---|---|
| புதுப்பிக்கத்தக்க வளங்கள் மாசற்ற மற்றும் சுற்றுச்சூழல் நலம் காக்கிறது. | புதுப்பிக்கத்தகாத வளங்கள் சூழலை மாசுபடுத்தவும். சேதப்படுத்தவும் செய்கின்றன. |
| இந்த வளங்கள் புதுப்பிப்பதற்கான ஒரு குறுகிய நேரத்தை எடுத்துக் கொள்கிறது. | இந்த வளங்கள் உருவாக்குவதற்குப் பல நூற்றாண்டுகள் தேவைப்படுகின்றன. |
| எடுத்துக்காட்டு: சூரியசக்தி, காற்றுசக்தி, நீர்,மரம், காகிதம். | எடுத்துக்காட்டு: உலோகங்கள், கண்ணாடி.<br>புதைப்படிவ எரிபொருள்கள் (நிலக்கரி,<br>பெட்ரோல். இயற்கை வாயு, டீசல்) |

18) ஏதேனும் ஐந்து சுற்றுச்சூழல் சட்டங்களையும் அவற்றின் செயல்களையும் விவரி

**பதில் :**

| சட்டம் | செயல்பாடு |
|---|---|
| 1. தேசியப் பசுமை தீர்ப்பாய சட்டம், 2010 | சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காடுகள் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கிறது. |
| 2. பல்லுயிர்மை பாதுகாப்புச் சட்டம், 2002 | பல்லுயிர்மைகளைப் பாதுகாத்தல் |
| 3. சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம், 1986 | சுற்றுச்சூழலை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான அதிகாரம் வழங்குதல் |
| 4. வன (பாதுகாப்பு) சட்டம், 1980 | காடுகளை அழித்தலை தடை செய்தல் மற்றும் காடுகள் அல்லாத பகுதிகளில் மரம் வளர்த்தலை ஊக்கப்படுத்துதல். |
| 5. நீர் (நீர் பாதுகாப்பு மற்றும் மாசுபடுத்துதல் தடுப்பு) சட்டம், 1974 | அனைத்து வகையான ஆறுகள், ஏரிகள், குளங்களை மீட்டுப் பராமரித்தல். |
| 6. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 | காட்டு விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு பாதுகாப்பு வழங்குகிறது. |

19) இந்தியாவில் சூரிய சக்தி பயன்பாடு குறித்து எழுதுக.

**பதில் :** (i) சூரிய சக்தி என்பது சூரிய ஒளி மூலம் மின்சக்தியை நேரடியாக சூரிய ஒளியின் மின்னழுத்த செல்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்தப்படுவதாகும்.

(ii) சூரிய ஒளி தகடுகள் சூரிய ஒளியினை மின் சக்தியாக மாற்ற சூரிய ஒளியை வேதி வினைக்கு உட்படுத்தி ஆற்றலாக மாற்றுகிறது.

(iii) சூரிய மின் தகடு அமைப்பின் மூலம், வீடு மற்றும் அலுவலகத்திற்குத் தேவையான மின்சாரம் தயாரிக்க முடியும். இந்த சூரிய மின் சக்தி அமைப்புகள் பெரும்பாலும் வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் மின் செலவைக் குறைக்க அவர்களால் நிறுவப்படுகின்றன.

(iv) சூரிய சக்தி உற்பத்தி தொழில், இந்தியாவில் வேகமாக வளர்ந்து வருகிறது. தமிழ்நாடு அதிக அளவில் சூரிய மின்தகடு அமைப்பு கொண்ட மாநிலமாக உள்ளது. இந்தியாவில் சூரிய சக்தி மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் முன்னணியில் உள்ளது.

(v) தமிழகத்தில் 2017ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் நாள் வரை நிறுவப்பட்ட சூரிய அமைப்புகளின் மூலம் பெற்ற மின்திறன் 1697 மெகாவாட் ஆகும்.

20) பொருளாதார மேம்பாட்டிற்கான குறியீடுகளை விவரி.

**பதில் : பொருளாதார மேம்பாட்டிற்கான குறியீடுகள்:**

(i) பொருளாதார மேம்பாடு என்பது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியையும், புதிய தொழில் நுட்பங்களையும் ஏற்றுக் கொள்வதாகும். பொருளாதார மேம்பாடு என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நிலையான வளர்ச்சியையும் குறிக்கிறது.

(ii) நிகர நாட்டு உற்பத்தி (NNP), தனிநபர் வருமானம் (PCI), வாங்கும் திறன் சமநிலை (PPP), மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (HDI) ஆகியவை பொருளாதார முன்னேற்றத்தின் முதன்மையானக் குறியீடுகளாகும்.

**நிகர நாட்டு உற்பத்தி:**

(i) நிகர நாட்டு உற்பத்தி தேசிய உற்பத்தியின் உண்மையான அளவாக கருதப்படுகிறது. இது நாட்டு வருமானம் என்றும் அறியப்படுகிறது.

(ii) தனி நபர் வருமான உயர்வு எப்போதும் மொத்த உண்மையான உற்பத்தியின் உயர்வு என்று பொருள்படும்.

(iii) எனவே, தனிநபர் வருமானமே நாட்டின் மேம்பாட்டை அளவிடும் சிறந்த குறியீடு ஆகும்.

**தலா வருமானம்:**

(i) நாடுகளின் வளர்ச்சியினை ஒப்பிட, மொத்த வருவாயைக் கணக்கிடுவது ஒரு பயனுள்ள நடவடிக்கையாக இருக்க முடியாது.

(ii) ஒரு நாட்டிலுள்ள மக்களைவிட வேறொரு நாட்டில் உள்ள மக்களிடையே நல்ல வருமானம் உள்ளது.

(iii) நாட்டின் தலா வருமானத்தை கணக்கிட நாட்டின் மொத்த வருமானத்தை நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க வேண்டும்.

(iv) சராசரி வருவாயை தலா வருமானம் என்று அழைக்கப்படுகிறது. அனைத்து நாடுகளின் தனிநபர் வருமானத்தின் கணக்கீடுகள் சர்வதேச அளவில் ஒப்பிடுவதற்காக அமெரிக்க டாலரில் மட்டுமே கணக்கிடப்படுகிறது.

**வாங்கும் திறன் சமநிலை:**

(i) வாங்கும் திறன் சமநிலை என்பது ஒரு நாட்டினுடைய நாணயங்களின் எண்ணிக்கைக்கு இணையாக, ஒரு சந்தையில் அமெரிக்க டாலரில் வாங்குவதற்கேற்றவாறு, உள்நாட்டு சந்தையில் அதே அளவிலானப் பொருட்களையும் வாங்குவதற்குத் தேவைப்படுகிறது.

(ii) வாங்கும் திறன் சமன்பாட்டின் நுட்பம் என்பது இருநாடுகளின் இரண்டு நாணயங்களுக்கிடையேயானப் பரிமாற்றம் அந்தந்த நாடுகளில் உள்ள இரண்டு நாணயங்களின் துல்லியமான வாங்கும் திறனை வெளிப்படுத்தத் தேவை என்பதை மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

**மனித வள மேம்பாட்டு குறியீடு:**

(i) எந்த ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மனித வளங்கள் அவசியமாகும்.

(ii) உற்பத்தித் துறையில் பயன்படுத்தக்கூடிய மனித வளங்களை கொண்டிருக்கும் மக்களையே மனித வளம் என்ற சொல் குறிக்கிறது.

(iii) மனித வள மேம்பாடு என்பது மனிதனின் உடல்திறன் மற்றும் சுகாதாரத் திறன்களை கல்வியின் மூலம் மேம்படுத்துவதாகும். எனவே மனித வளத்தில் கல்வி மற்றும் உடல்நலத்தில் செய்யப்படும் முதலீடு எதிர்காலத்தில் உயர்ந்த வருமானத்தை அளிக்கலாம்.

(iv) மனித வளர்ச்சி குறியீடு என்பது சமூகத்தின் மக்கள் அனைவரின் ஒட்டு மொத்த மேம்பாட்டைக் குறிக்கிறது

21) தமிழ்நாட்டில் பொருளாதார சமூக முன்னேற்றம் குறித்து விரிவான விடை தருக.

**பதில் :** 1. தமிழ்நாடு குறைந்த காலகட்டத்துக்கள் மிக விரைவான வளர்ச்சியை எட்டிய சில மாநிலங்களில் ஒன்றாகும்.

2. தமிழ்நாட்டில் மதிய உணவு வழங்கும் திட்டம், சுகாதார மையங்கள், சாலை வசதிகள், பொதுப் போக்குவரத்து, குடிநீர் வசதி, மின் இணைப்பு வழங்குதல் போன்ற சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

3. பொதுக்கல்வி, மருத்துவ மற்றும் சுகாதாரத் துறை, சமூகப்பாதுகாப்பு, பொதுநல வசதிகள் போன்ற துறைகளில் முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

4. சிறப்பான நிர்வாகத் திறடை, மரபுரீதியாக அமைந்த சில அமைப்புகள், சுகாதாரமையங்கள், அரசு அலுவலகங்கள், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை மற்ற மாநிலங்களை விட சிறப்பாக செயல்படுகின்றன.

5. சாதி மற்றும் சமத்துவமின்மையைக் களைவதில் தமிழகம், கேரளா, இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் சிறப்பான அக்கரை காட்டி வருகின்றன.

6. தமிழ்நாட்டின் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு, மனித திரன்கள் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

7. தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளது. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன